[9th April 1960

அபிப்பிராயம் கூறுகிறது. நிர்வாக இலாகா அதை ஏற்றுக்கொண்டு நடத்தினால் அதற்கு எவ்வளவு செலவு ஆகும், அதற்கு பணம் எவ்வளவு வேண்டும், எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பதையெல்லாம் கணக்கு செய்து அவர்கள்தான் அதுபற்றி முடிவு செய்யவேண்டும். சர்க்கார் இலாகாக்களில் தொழிலாளர் இலாகா சிபார்சு செய்யக்கூடிய நிலைமையில் தான் இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : 'இரண்டு ஆட்டை ஊட்டிய குட்டி' என்று சொல்லுவது போல. . .

MR. SPEAKER : இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. கனம் அங்கத்தினர் நான் சொல்லுவதை கேட்காவிட்டால் அவர்கள் உப கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்கமாட்டேன். கேள்வி நேரத்தில் இந்த மாதிரி பழமொழி எல்லாம் சொல்லுவது சரியல்ல. நேராக கேள்வி கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : தொழிலாளர் மந்திரியைக் கேட்டால் மின்சார மந்திரியை கேட்கவேண்டும் என்றும், மின்சார மந்திரியைக் கேட்டால், போர்டை கேட்க வேண்டுமென்றும், போர்டை கேட்டால் சர்க்காரைக் கேட்க வேண்டுமென்றும், மூன்று ஆட்டை ஊட்டிய குட்டி போல. . .

MR. SPEAKER : இந்தக் கேள்வி 'அவுட் ஆப் ஆர்டர்'. கனம் அங்கத்தினருக்கு உபகேள்விகள் கேட்பதற்கு சான்ஸ் கொடுக்க மாட்டேன் என்று 'வார்ன்' பண்ணுகிறேன். கேள்வி நேரத்தின்போது பழமொழி சொல்லக்கூடாது என்று சொன்னால், கனம் அங்கத்தினர் திரும்பவும் பழமொழியை 'ரிபீட்' செய்கிறார்கள். அவர்களுக்கு உப கேள்வி கேட்பதற்கு சந்தர்ப்பம் கொடுக்காவிட்டால் மன்னிக்க வேண்டும்.

SRI K. ANBAZHAGAN : தொழிலாளர்கள் பட்டினி இருப்பதன் காரணம் முன்னர் ஏற்பட்டிருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றவில்லை என்பது. அந்த ஒப்பந்தத்தை பாதுகாக்க தொழில் இலாகாவுக்கு உரிமை இல்லையா ? அந்த ஒப்பந்தம் நடத்தப்பட்டு வருகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பழைய ஒப்பந்தம் ஏற்பட்டதற்கும் இப்பொழுது இவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Housing Scheme for Plantation Labour

* 646 Q.—SRI N. R. THIAGARAJAN (on behalf of Sri W. P. A. R. CHANDRASEKARAN) : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to include the housing scheme for the Plantation Labour in the housing scheme for the Industrial Labourers ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI N. R. THIAGARAJAN : சாதாரண பிராந்தியங்களைக் காட்டிலும் மலைப் பிராந்தியங்களில் தொழிலாளர்கள் கஷ்டம் மிகவும் அதிகமாக இருக்கிறது. அரசாங்கம் கொஞ்சம் கருணை கூர்ந்து இதை பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : வீடு கட்டும் திட்டத்தில் 'பிளான்டேஷன் லேபர் ஹௌஸிங்'க்கு தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது பூராவும் கடன் தொகையாகத்தான் கொடுக்கப்படும். 'ஸப்ஸிடைஸ்டு இண்டஸ்டிரியல் ஹௌஸிங் ஸ்கீம்'படி ஓரளவு மானியம் கொடுக்கப்படுகிறது. இந்த மானியம்தான் இப்பொழுது இல்லை என்று சொன்னேன். ஆனால் 'பிளான்டேஷன் ஹௌஸிங் ஸ்கீம்' பிரகாரம் கடன் கேட்டால் அது கொடுக்கப்படும்.